

‘தி.மு.கழகத்தின் பீமசேனன் வை.பெருமாள்’ என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்ட தொ.மு.ச. பேரவை முன்னாள் பொதுச்செயலாளர் வை.பெருமாள் அவர்களின் 25ஆம் ஆண்டு நினைவு நாளினை முன்னிட்டு தொ.மு.ச. பேரவை தலைமை அலுவலகமான கலைஞரகத்தில் அவரது திருவுருவப் படத்திற்கு தொ.மு.ச. பேரவைத் தலைவர் கி.நடராசன், பொருளாளர் கோ.சி.வள்ளுவன், அமைப்புச் செயலாளர் வி.வேலுசுவாமி, இணைப்பொதுச்செயலாளர் ஜெ.விஜயகுமார், அலுவலகச் செயலாளர்கள் ஆ.சீ.அருணகிரி, ப.பன்னீர்செல்வம், பேரவை செயலாளர் நா.தனசேகரன், தொலைத் தொடர்பு தொ.மு.ச. தலைவர் செல்லபாண்டியன், பேரவை செயற்குழு உறுப்பினர் எல்.பி.எப். அமல்ராஜ், மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்ற சங்கத்தின் இணை செயலாளர் ஆவடி ராஜ்குமார் ஆகியோர் மலர்தூவி வணங்கினர்.

### தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச

# கூலி உயர்வுச் சட்டத்தை அரசு உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும்!

## புதுச்சேரி தொ.மு.ச. மாநில செயற்குழு வலியுறுத்தல்!

புதுச்சேரி, ஆக. 14-

புதுச்சேரி அரசு இயற்றி வுள்ள தொழிலாளர்களுக் கான குறைந்தபட்ச கூலி உயர்வு சட்டத்தை உடனடி யாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று புதுச்சேரி மாநில தொழிலாளர் முன் னேற்றச் சங்கம் அரசை வலி யுறுத்தி உள்ளது.

புதுச்சேரி மாநில தொழி லாளர் முன்னேற்றச் சங்கத் தின் மாநில செயற்குழு கூட் டம் லப்போர்த் வீதியில் உள்ள திமுக தலைமை அலு வலகத்தில் நேற்று மாலை 6.30 மணிக்கு நடந்தது.

கூட்டத்திற்கு தொமுச மாநில அமைப்பாளர் அண்ணா அடைக்கலம் தலைமை வகித்தார். தலை வர் அங்காளன் வரவேற்று பேசினார். துணைத் தலை வர் ராமகிருஷ்ணன், துணை அமைப்பாளர்கள் சிவக்கு மார், சீனுவாசன், துரை, மிஷேல், கண்ணன், விஜய பாஸ்கர், கொளஞ்சிநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாநில கழக அமைப் பாளரும், மேனாள் சட்ட மன்ற எதிர்க்கட்சித் தலை வருமான இரா.சிவா பங்கேற்று தொழிற்சங்க பிரச்சினைகளை தீர்ப்ப தற்கு வழக்கறிஞர் குழு ஒன்று அமைக்கப்படும், புதிய கட்சி அலுவலகத்தில் தொ.மு.ச.விற்கு தனி இடம் அளிக்கப்படும். சங்கம் வளர்ச்சி பெறுவதற்குறிய வழிமுறைகள் குறித்து பேர வையுடன் பேசி முடிவு எடுக்கப்படும். கழகத் தலை வர் தளபதி அவர்களை புதுச்சேரி மாநில தொமுச நிர்வாகிகள் சந்திக்க ஏற் பாடு செய்துத்தரப்படும் என்று கூறி பல்வேறு ஆலோ சனைகள் வழங்கினார்.

கூட்டத்தில், புதுச்சேரி மாநில வளர்ச்சிக்கும், இளைஞர்களின் முன்னேற் றத்திற்கும் புதிய தொழிற்சா லைகள் துவங்க அரசு நட வடிக்கை எடுக்க வேண்டும், அரசு இயற்றிவுள்ள தொழி லாளர்களுக்கான குறைந்த பட்ச ஊதிய உயர்வுச் சட் டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். புதுச்சேரியில் உள்ள தனியார் தொழில் நிறுவனங்களில் உள்ளூர் இளைஞர்களுக்கு 90 சதவீத வேலை வழங்க வேண்டும். அமைப்புசாரா நலவாரியத் திற்கு தேவையான நிதியை அரசு உடனடியாக ஒதுக்கி வாரியத்தை செயல்பாட் டிற்கு கொண்டுவர வேண் டும். மூடப்பட்டுள்ள பஞ் சாலை தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய நிலு வைத் தொகையினை உட னடியாக வழங்க வேண் டும். ஸ்பின்கோ தொழி லாளர்களுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகையினை நீதிமன்ற தீர்ப்பின்படி வழங்க வேண் டும். பிஆர்டிசியில் ஓய்வு பெற்றவர்களுக்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ள கிராஜூ வேட் தொகையை உடனடி யாக வழங்க வேண்டும். புதுச்சேரி பாண்லே நிர்வாக சீர்கேட்டால் ஏற்படும் நிதிச் சுமையை தடுத்து நிறுத்த அரசு முன்வர வேண்டும், நெட்டப்பாக்கம் எம்.ஆர்.எப். நிர்வாகம் ஒருதலைபட்ச மாக செயல்படாமல் அனைத்து தொழிற்சங்கங்க ளையும் சமஅளவில் நடத் திட வேண்டும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் எம்ஆர்எப், எல்&டி, எஸ்இடிசி, பிஆர் டிசி, தேவி இண்வென்ச்சர் தொழிற்சங்க நிர்வாகிகள் மற்றும் பல்வேறு ஆட்டோ தொழிலாளர் சங்கங்களை சேர்ந்த 100க்கும் மேற் பட்ட தொ.மு.ச. நிர்வாகி கள் பங்கேற்றனர்.

கூட்ட முடிவில், தொ.மு.ச. மாநில துணைத் தலைவர் காயாரோகணம் நன்றி கூறினார்.

### தென்காசி மாவட்டம் –

# ஆலங்குளத்தில் நூலகர் தினவிழா உள்பட நான்குவிழாக்கள்!

## முன்னாள் மாவட்டச் செயலாளர் பொ.சிவபத்மநாதன் பங்கேற்பு!

தென்காசி, ஆக.14-

தென்காசி மாவட்டம் ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதி வெங்கடாம்பட்டி ஊராட்சி கோவிலூற்றில் நூலகர் தின விழா வாசகர் வட்ட விழா பள்ளி மாணவ மாணவியர்களுக்கு பரிச ளிப்பு விழா என்னால் முடி யும் நாடகத் துவக்க விழா ஆகிய நான்கு நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இந்நிகழ் வில் முன்னாள் தென்காசி தெற்கு மாவட்டச் செயலா ளர் பொ.சிவபத்மநாதன் பங்கேற்று பரிசு வழங்கினார்.

இந்நிகழ்வு மாவட்ட நூலக அலுவலர் மேரி தலை மையில் ஓய்வு பெற்ற ஆசி ரியர் செல்லப்பா ஓய்வு பெற்ற தபால் துறை அலு வலர் சுப்பிரமணியன், குமர குருபரன், தியாகராஜன், செல்வராஜ், அரவிந்த் குமார், சண்முகவேல் ஆகி யோர் முன்னிலையில் நடைபெற்றது. நூலகர் முருகவேல் பிரகாஷ் வர வேற்றுப் பேசினார்.

நிகழ்ச்சியில் தென்காசி தெற்கு மாவட்ட முன் னாள் செயலாளர் பொ.சிவ பத்மநாதன் பங்கேற்று வாழ்த்துரை வழங்கியும்,பரி சுகள் வழங்கியும் என்னால் முடியும் என்ற சமூக சீர் திருத்த நாடகத்தையும் துவக்கி வைத்தார்.

நிகழ்வில் கடையம் ஒன் றிய துணை தலைவர் மகேஷ் மாயவன், ஒன்றிய கவுன்சிலர் சங்கர், ஊராட்சி மன்ற தலைவர் சாருகலா, முன்னாள் மாவட்ட பொறுப்புக் குழு உறுப்பி னர் மேகநாதன், மாவட்ட பிரதிநிதி லட்சுமியூர் ரவி, அன்பழகன், துரை பாண்டி யன், கவிஞர் செல்வவேல், மாயவநாதன், கடையம் ஒன்றிய ஆத்மா சேர்மன் குணசீலன், கிளைக் கழகச் செயலாளர் ஜெயராஜ், ஓய்வு பெற்ற ஆசிரியர் இளம்பரிதி, சண்முக சிங், ஆசிரியர்கள் ராஜேந்திரன், லாரன்ஸ், சகாதேவன்பேரா சிரியர் முருகேசன், நூலகர் சண்முகவேல், பிரகாஷ் நூலகர்கள் பழனி ஈஸ்வரன், ஓய்வு பெற்ற காவலர் வேலுச் சாமி, ஒன்றிய அவைத்தலை வர் ரவி, ஒன்றிய சமூக வலைதள களப்பணியாளர் செல்லத்துரை, ஒன்றிய சிறு பான்மை அணி துணை அமைப்பாளர் ஜெபராஜ் பாகமுகவர்கள் தங்கமாரி, சுப்பிரமணியன், பிரகாஷ், சுரேஷ் குமார், தர்மராஜ், ராஜா ராம், ராஜேஷ், அர விந்த், வழக்கறிஞர் பால் ராஜ் சுந்தர், ஜெகதீசன், பொன் சிங், குமார் ராஜா, கீழக்கடையம் பாக்யராஜ் அருள்பாண்டி, குணா ராஜ பாண்டியன், முன்னாள் ஊராட்சி உறுப்பினர் ராஜா ராமர் கஜராஜா உள்ளிட் டோர் கலந்து கொண்டனர்.

பூலாங்குளம் மாதாபட் டணம் வள்ளியம்மாள்புரம் பள்ளிகளைச் சேர்ந்த முதல் மூன்று மதிப்பெண் எடுத்த மாணவ - மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கபட்டது. புதிய புரவலர்களாக 12 பேர் சேர்ந்தனர். அதற்குரிய கட்டணம் 12,000 மாவட்ட நூலகரிடம் வழங்கப் பட்டது.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடு களை துரை மற்றும் முருகே சன் செய்திருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இரா.தட்சிணாமூர்த்தி

### ஆகஸ்ட் 14 (2021)



இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு 1968ஆம் ஆண்டு உறுப்பினராகி பணியாற்றியவர்.

சீரணி தொண்டராக பணியாற்ற தொடங்கி, தொண்டர் படையிலும், பின்னர் எழும்பூர் பகுதி பிரதிநிதியாக பொறுப்பு வகித்தவர்.

பணியாளர் கூட்டுறவு சிக்கன மற்றும் சேமிப்பு கடனுதவி சங்க இயக்குராக இருந்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்துகொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.



# தி.மு.க. இளைஞர் அணி



## தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில், கல்வி, மருத்துவ உதவித்தொகை மற்றும் பொற்கிழியாகப் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 25 பேருக்கு

கழக இளைஞர் அணிச் செயலாளர் – மாண்புமிகு தமிழ்நாடு எதிர்க்கட்சித் தலைவர் **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் **ரூ.6,25,000/–** வழங்கினார்.

கழகத் தலைவர் அவர்களது வழிகாட்டுதலின்படி, தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளையில் இருந்து, கழகத்தினர் மற்றும் பொதுமக்களுக்கு கல்வி, மருத்துவ உதவிகள் மற்றும் கழக முன்னோடிகளுக்கான பொற்கிழியாக, ஒவ்வொருவருக்கும் தலா ரூ.25ஆயிரம் நிதி உதவியாக வழங்கப்பட்டுவருகிறது.

பொதுமக்கள் வழங்கும் மனுக்கள் மற்றும் மாவட்டக் கழகச் செயலாளர், இளைஞர் அணி நிர்வாகிகளின் பரிந்துரையுடன் வரும் கோரிக்கை மனுக்களை ஆய்வுசெய்து, இந்த நிதி உதவிகளை வழங்கிவருகிறார், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்.

அந்த வகையில், ஆகஸ்ட் மாதத்தில் நிதி உதவிகளைப் பெறும் 25 பயனாளிகளின் விவரம் வருமாறு :

| வ. எண் | பெயர், முகவரி |
|---|---|
| 1. | தாஜ் நிஷா, க/பெ முஹம்மது ஜின்னா, 11, அசோகர் வீதி, இ.வி.பி.நகர், வெள்ளலூர், கோயம்புத்தூர் – 641 111 |
| 2. | ர.ராஜேஷ்குமார், த/பெ ரவிச்சந்திரன், 54, அக்கையா நாயுடு முதன்மைச் சாலை, திருத்தணி, திருவள்ளூர் – 631 209 |
| 3. | செ.தங்கேஸ்வரன், த/பெ செல்லப்பாண்டி, 2/438, கிழக்குத் தெரு, சுக்கிரவாரப்பட்டி, திருத்தங்கல், விருதுநகர் – 626 130 |
| 4. | சு.கீர்த்தனா, த/பெ சுரேஷ், 97/207, வெங்கட்ரங்கம் பிள்ளை தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005 |
| 5. | மீ.நிஜாம்தீன், த/பெ மீரான்கான், 28/61–பி, அசேன் உசேன் தெரு, போடிநாயக்கனூர், தேனி – 625 513 |
| 6. | வெ.மீனா, க/பெ வெள்ளியங்கிரி, 4/44, குமாரசாமி நகர், காட்டன் மில் கிழக்குபுரம், பிச்சம்பாளையம், திருப்பூர் – 641 602 |
| 7. | மு.துளசிராமன், த/பெ முருகேசன், 13/1, கீழநத்தம், பில்லூர், நன்னிலம், திருவாரூர் – 609 403 |
| 8. | ரா.கீர்த்திகா, த/பெ ராஜா, 68/11, சத்தியமூர்த்தி நகர், நந்தனம், சென்னை – 600 035 |
| 9. | ப.கதிர்வேலு, த/பெ பழனியப்பன், 12, மரப்பாலம் சாலை–3, கே.ஆர்.எஸ்.நகர், கருங்கல்பாளையம், ஈரோடு – 638 003 |
| 10. | நீ.தினேஷ்குமார், த/பெ நீலகண்டன், 70, சிவன் கோயில் தெரு, பொன்னேரி, திருவள்ளூர் – 601 204 |
| 11. | ப.செந்தாமரைக்கண்ணன், த/பெ பழனி, பறையப்பட்டி, மொரப்பூர், அரூர், தருமபுரி – 636 903 |
| 12. | க.சாய்பிரசாத், த/பெ கருணாகரன், 12, மேட்டுத் தெரு, திருவான்மியூர், சென்னை – 600 041 |
| 13. | அ.நாகராஜ், த/பெ ஆறுமுகம், 32, ராஜாஜி வீதி, பொள்ளாச்சி சாலை, உடுமலைப்பேட்டை, திருப்பூர் – 642 126 |
| 14. | இ.ஷாமலதா, த/பெ இளையராஜா, 24/42, வேம்புலி சுபேதார் தெரு, ஆலந்தூர், சென்னை – 600 016 |
| 15. | கோ.கா.முத்துசாமி த/பெ காளியப்பன், 126/71, மணிமேகலை வீதி, புதுப்பாளையம், கோபிசெட்டிபாளையம், ஈரோடு – 638 452 |
| 16. | கா.சுகந்தி, க/பெ காளிராஜ், லோகநாதன் குடியிருப்பு, மயிலாப்பூர், சென்னை – 600 004 |
| 17. | ப.பாப்பாத்தி, க/பெ பழனிசாமி, 2/63, வடக்குத் தோட்டம், இளநகர், திருச்செங்கோடு, நாமக்கல் – 637 212 |
| 18. | அ.ரபின்சாபி, க/பெ அப்துல் ஹமீது, 35, தாஸ்கண்ட் நகர், 1–வது தெரு, விருதாசலம், கடலூர் – 606 001 |
| 19. | மா.ராஜசேகரன், த/பெ மாசிலாமணி, 3/25–பி, ஞானபுரம், குனியமுத்தூர், கோயம்புத்தூர் – 641 008 |
| 20. | பி.காஞ்சனா, க/பெ பிரகாஷ், 41/97, கே.சி.கார்டன், 4–வது தெரு, ஜவஹர் நகர், சென்னை – 600 082 |
| 21. | ஹ.சைலேஷ், த/பெ ஹரிஹரசுதன், 13/205, அண்ணா தெரு, கொசவன்பாளையம், திருநின்றவூர், திருவள்ளூர் – 602 024 |
| 22. | ஜு.ஆத்திஃபா, த/பெ ஜுபிர் அலி, 31/33, ஐயர்துரை வீதி, பெரிய அக்ரஹாரம், ஈரோடு – 638 005 |
| 23. | பொ.ஜெயபாலன், த/பெ பொன்னுசாமி, 78–பி–பிளாக், நெடுஞ்செழியன் நகர், சிந்தாதிரிப்பேட்டை, சென்னை – 600 002 |
| 24. | சி.காமேஷ், த/பெ சிவக்குமார், 49, கொம்மம்பட்டு, கோவிந்தாபுரம், ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி – 635 207 |
| 25. | பா.பாலசுப்பிரமணியன், த/பெ பாண்டி, 9–13, கிழக்குத் தெரு, திருப்பரங்குன்றம், மதுரை – 625 005 |

அன்பகம்
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 12.08.2026

# திருவாரூரில் இலவச பொது மருத்துவம் - கண் சிகிச்சை முகாம்!

## கே.எஸ்.எஸ்.தியாகபாரி – நாகை அசோகன் தொடங்கி வைத்தனர்!

திருவாரூர்,ஆக14.

திருவாரூர் கழக செயல் மறவரும் தமிழ்ச் சங்க செயலாளரும், லயன்ஸ் மாவட்டத் தலைவருமான ஆரூர் அறிவின் பிறந்த நாளை முன்னிட்டு, தஞ்சா வூர் காமாட்சி மருத்துவ மனை மற்றும் கும்ப கோணம் டாக்டர் அகர் வால் கண் மருத்துவமனை இணைந்து நடத்திய இல வச பொது மருத்துவம் மற் றும் இலவச கண் சிகிச்சை முகாம் சிறப்பாக நடை பெற்றது.

முகாமை வேலுடை யார் கல்விக் குழுமத் தலை வர் கே.எஸ்.எஸ். தியாக பாரி மற்றும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நாகை அசோகன் ஆகி யோர் தொடங்கி வைத்த னர். நிகழ்ச்சியில் லயன்ஸ் மாவட்டத் தலைவர் ஆரூர் அறிவு அனைவரையும் வர வேற்றார்.

நிகழ்ச்சியில் மாவட்டத் தலைவர் ஜாய் செந்தில், அலிவலம் ரவி, இஞ்சினி யர் டேவிட், ரோலி பள்ளி நிர்வாகி முரளி தரன் உள் ளிட்டோர் கலந்து கொண் டனர். சிறப்பாகப் பங் கேற்றவர்களுக்கு நினைவுப் பரிசுகள் வழங் கப்பட்டன.

மேலும், முன்னாள் லயன்ஸ் தலைவர்கள் ஜோதிநமச்சிவாயம், தியா கசுந்தரம், முனைவர் அறி வழகன், விஜய குமார், ஆர்.எஸ்.ஆர். ராமு ராஜா உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

முகாமில் பொதுமக்க ளுக்கு இலவசமாக பொது மருத்துவப் பரிசோதனைக ளும், கண் பரிசோதனைக ளும் மேற்கொள்ளப் பட்டு, தேவையான மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்விற்கான ஏற் பாடுகளை திருவாரூர் விக் டரி லயன்ஸ் சங்கத் தலை வர் ராஜேஷ், செயலாளர் கார்த்தி, பொருளாளர் கலையரசு ஆகியோர் சிறப் பாக செய்தி ருந்தனர்.

முகாமில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு பயனடைந்த னர்.